# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள ஹதீகத்துல் மஹ்தி மாநாட்டுத் திடலில்
## 30.07.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அத்தவ்பாவின் 112 வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: அவர்கள் கழிவிரக்கங் கொள்பவர்கள், வணங்குபவர்கள், (இறைவனைப்) புகழ்பவர்கள், நோன்பு நோற்பவர்கள், (இறைவனிடம்) குனிபவர்கள, (தொழுகையில்) சிரம்பணிபவர்கள், நன்மையை ஏவுபவர்கள், தீயவற்றிலிருந்து தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள். (இத்தகு தன்மைகளைக் கொண்ட) நம்பிக்கை கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக! (9:112)**

இந்த வசனத்தில் மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் தருபவர்களைக் குறித்து கூறப்பட்டுள்ளது. அம்மக்கள் இந்த ஈமானின் உயர் தகுதியினால் இறைவனிடம் நற்செய்தி பெறுகின்றனர். இத்தகைய சிறப்புத் தன்மையை கொண்டிருப்பதனால் இவர்கள் உண்மையான முஃமின் என்று அழைக்கப்படுகின்றனர். இறைவன் அவ்வசனத்தில் கூறுகிறான்.

அம்மக்கள் **தாயிபூன்** – தவ்பா செய்பவர்கள்; எந்த அளவுக்கு தவ்பா செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு தவ்பா செய்பவர்கள்.

**ஹாமிதூன்** – இறைவனைப் புகழ்பவர்கள்; எந்த அளவுக்கு புகழ வேண்டுமோ அந்த அளவுக்கு ஹம்து செய்பவர்கள்.

**சாலிஹீன்** – அல்லாஹ்வின் வழியில் பயணம் மேற்கொள்பவர்கள்; அதுவும் மார்க்கத்திற்காக – மார்க்கத்தைப் பற்றி அறிவதற்காக பயணம் செய்பவர்கள்.

**ராஜிவூன்** – முழுமையாக இறைவன் முன் குனிபவர்கள்; பணிவு, எளிமை மற்றும் தன்னலமின்மை ஆகிய பண்புகளை முழுமையாகக் கொண்டவர்கள்.

**சாஜிதூன்** – உருக்கம் மற்றும் பணிவின் இறுதி எல்லையில் இருப்பவர்கள்; முழுமையான கட்டுப்படுதலுடன் இறைவனிடம் ஸஜ்தா செய்தவாறு இருப்பவர்கள்.

நன்மையை ஏவுபவர்கள்; தீமையைத் தடுப்பவர்கள். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எடுத்து வைக்கும் உண்மையான தாயி (இறைவழியில் அழைப்பவர்) ஆக நன்மையை ஏவியவாறு தீமையைத் தடுக்கின்றனர். பெரும் பெரும் தீமைகள் மட்டுமின்றி நுட்பமான தீமைகளிலிருந்தும் தடுக்கின்றனர். பெரும் பெரும் நன்மைகளை மட்டுமின்றி சிறு சிறு நன்மைகளிலும் கவனமூட்டுபவர்கள் ஆவர்.

தமக்குள் தூய மாற்றம் ஏற்பட்டு, தாமே நன்மைகளை செய்து தீமைகளிலிருந்து விலகியிருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

ஒருவரிடம் தவ்பாவிலும், இபாதத்திலும், அல்லாஹ்வைப் புகழ்வதிலும், மார்க்கத்தைக் கற்பதற்காக பயணம் செய்வதிலும், ருகூவு, ஸுஜுது(குனிதல், சிரம் பணிதல்)விலும், அதன் கடமைகளை முழுமையான நிறைவேற்றுவதிலும் கவனம் ஏற்படும் போது அவர் தீமைகளிலிருந்து விலகுகிறார்; அவரது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் நன்மை வெளிப்படுகிறது. இம்மக்களே அல்லாஹ் கூறியுள்ள இத்தகுதிகளை அடைகின்றனர். அதாவது, அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் என்ற பிரிவில் சேருபவர்கள் ஆவர். அல்லாஹ் இம்மக்களுக்கு நன்மையில் முன்னேறுவதற்கு தவ்ஃபீக் தருகிறான்.

இப்போது நீங்கள் என் முன்னால் உட்கார்ந்திருக்கிறீர்கள். நீங்கள் இப்பிரிவில் சேருவதற்கு முயற்சி செய்தவாறு இருக்க வேண்டும் என்பது எனது துஆவும் எதிர்பார்ப்பும் ஆகும். உங்களில் பெரும்பாலார் பெரும்

சிரமத்துடன் இங்கு பயணம் செய்து வந்துள்ளீர்கள். இன்று ஆரம்பமாகப் போகிற இந்த மாநாட்டில் பங்கு பெறுவதற்காக வந்துள்ளீர்கள். நான் காலையில் சுபுஹ் தொழுகையை தொழுது விட்டு செல்லும் போது பார்த்தேன். அதிகமான குடும்பங்கள் நீண்ட பயணம் செய்து இங்கு வந்தவர்களாகத் தென்பட்டனர். முழு இரவும் பயணம் செய்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அவர்களும் குழந்தைகளும் பெண்களும் கூட இருந்தனர். அவர்கள் மிகவும் சிரமம் மேற்கொண்டு பயணம் செய்து வந்தனர். மேலும் இங்கு ஹதீகத்துல் மஹ்தி (மாநாட்டுத் திடல்) பகுதிக்கு வந்து சேர்வதற்காகவும் சிறிது பயணம் மேற்கொண்டுள்ளனர். இறைவனின் பார்வையில் இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. முஃமின்களின் ஜமாஅத் மார்க்கத்திற்காக – மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்காக பயணம் மேற்கொள்கின்றனர். எனவேதான் இறைவன், தவ்பா செய்பவர்கள், இறைவனது வரம்புகளைப் பேணுபவர்கள், ஹம்து – இறைவனைப் புகழ்வதால் தமது நாவை ஈரமாக்குபவர்கள் ஆவர். பணிவுடன் இறைவனது முன் ருகூவு, ஸுஜூது செய்பவர்களின் கூட்டத்தில் அல்லாஹ்வுக்காக பயணம் செய்பவர்களையும் இணைத்துள்ளான். அவர்களது நன்மை, தக்வா ஆகியவற்றை மேலும் மெருகூட்டுவதற்காக இறைவன் இதனை செய்துள்ளான். எனவே இன்று இந்த நோக்கத்திற்காக மக்கள் இங்கு வந்துள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளாக வந்துள்ளனர். உலக நோக்கத்தை விட்டு விட்டு நான் மேற்கூறிய இந்த உயரிய நோக்கத்தை கவனத்தில் வையுங்கள். பொறுமையுடன் பெரும் பயணம் மேற்கொண்டு இங்கு வந்திருப்பவர்களுக்கு சேவை செய்வதற்கு ஜமாஅத் அமைப்பின் கீழ் சிறப்பான ஏற்பாடுகள் உள்ளன என்றாலும், வந்திருப்பவர்கள் அல்லாஹ்வுக்காக பயணம் செய்து வந்துள்ளனர். அம்மக்களுக்கு உலகின் சொகுசுகள் மீது குறைவான கவனமே இருக்கும். இங்கு ஓரிடத்தில் ஒன்றுகூடியிருக்கும் அடிப்படை நோக்கத்திலிருந்து அருளைப் பெறுவதில்தான் அதிக கவனம் இருக்கும்.

எனவே நீங்கள் ஒருபோதும் உலகியல் விருந்தாளிகள், பயணிகளின் கூட்டத்தில் சேர முயற்சிக்காதீர்கள். இதனை நீங்கள் கவனத்தில் கொண்டு விருந்தோம்பலின் தவறுகள் பலவீனங்களை கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். ஏனெனில் சில நேரங்களில் புகார்கள் வருகின்றன. இன்னின்ன இடத்தில் இருக்கும் விருந்தாளிகளுக்கு நல்ல ஏற்பாடுகள் உள்ளன. நல்ல ஏற்பாடுகள் உள்ள இடத்தில் இன்னார் வைக்கப்பட்டுளளனர். நம்மைத்தான் கவனிப்பவர் இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் ஜமாஅத் அமைப்பை பொருத்தவரையில் எல்லா விருந்தாளிகளுக்கும் நல்ல முறையில் வசதிகள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆம்! சில விருந்தாளிகள் ஜமாஅத் அல்லாதவர்கள் ஆவர். இன்னும் சிலர் சமுதாயத்தின் தலைவர்களாக உள்ளனர். அவர்களுக்கு தனிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அது அனுமதிக்கப்பட்டதும் ஆகும். ஜமாஅத் அமைப்பு முடிந்த வரை எல்லாருக்கும் ஓய்வும் வசதியும் கிடைக்க முயற்சி செய்கிறது. நான் கலந்து கொள்கிற விருந்தாளிகளிடம் கூறுவதாவது, நீங்கள் வந்த நோக்கத்தை கவனத்தில் கொள்வீர்கள் எனில் நன்மைகளில் கவனம் செலுத்த முயற்சி செய்வீர்கள் எனில் நீங்கள் நற்செய்திக்குரிய முஃமின்களில் அடங்குவீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னிடம் பைஅத் செய்த விருந்தாளிகளைப் பெரிதும் மதித்தார்கள். அவர்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ''உங்கள் சிரமங்கள், தேவைகளை எந்த கூச்சமுமின்றி அலட்டலுமின்றி என்னிடம் கூறிவிடுங்கள்'' என்று கூறுவார்கள்.

ஆனால் ஜல்ஸாவுக்கு வருகிற விருந்தாளிகள் அனைவரையும் ஒரேமாதிரி ஒரே ஏற்பாட்டின் கீழ் கவனித்துக் கொள்ளுமாறு கூறுவார்கள். அத்துடன் பொதுவாக ஒரு விஷயத்தை விருந்தாளிகள் உள்ளத்தில் உறுதியாக பதிய வைத்திருந்தார்கள். அது என்னவெனில், ''நீங்கள் மார்க்க நோக்கத்திற்காக வந்துள்ளீர்கள். உங்கள் உள்ளத்தையும் மூளையையும் தூய்மைப்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதின் எல்லா படித்தரத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும்''.

இந்த நோக்கத்தைப் பெறுவதற்காகத்தான் நீங்கள் விருந்தாளிகளாக இங்கு வந்துள்ளீர்கள்; ஒன்றுகூடுகின்றனர். இந்த நோக்கத்திற்காகத்தான் ஜல்ஸாவுக்கு வரவும் வேண்டும். விருந்தாளிகளுக்கு இன்னும் பொதுவான விஷயங்களை நான் கூற விரும்புகிறேன்.

ஒரு முஃமின் தனது நேரத்தைச் சரியாக பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். அது முக்கியமானதாகும். இதுபோன்ற முக்கியமான நோக்கத்திற்காக கூடும்போது வெகு தூரத்திலிருந்து வருகை தந்துள்ள உறவினர்கள், தெரிந்தவர்களுடன் சந்திக்கவும், உடன் அமரவும் விருப்பம் ஏற்படுகிறது. மேலும் ஒரே நாட்டைச் சேர்ந்த உறவினர்கள், தெரிந்தவர்கள் சந்திப்பதற்கு மட்டும் தான் இங்கு வாய்ப்பு என்பதல்ல. பல்வேறு நாடுகளில் வசிக்கும் உறவினர்கள், தெரிந்தவர்களையும் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அத்தகைய ஒரு ஜமாஅத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்த ஜமாத்தின் வரம்புகள் நாடு, இனம் என்ற எல்லாவற்றையும் கடந்தவையாகும். ஒரு மகத்தான சகோதரத்துவத்தின் அடிப்படையைக் கொண்டவையாகும். இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களுக்குரிய நோக்கமாக அன்னார் கூறிய ஒரு விஷயமாவது, ஜமாஅத்தின் தொடர்புகள் நிலைநாட்டப்பட்டு அதில் ஓர் உறுதி ஏற்பட வேண்டும்; நாம் அனைவரும் ஒரே சமுதாயமாக ஆகிவிட வேண்டும் என்பதாகும். இதற்கு உள்ளம் ஒன்றுபட வேண்டும். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தெரிந்திருக்க வேண்டும். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அமர்ந்து கேட்க வேண்டும். அதன் பிறகுதான் அதற்கு வாய்ப்பே ஏற்படும். இரவுகளை பேசிக் கொண்டே வீணாக்குகின்றனர் என்பது சில நேரங்களில் தெரிய வருகிறது. அல்லது உணவு உண்ணும் இடத்தில் பேசிக் கொண்டே நிற்கிறார்கள். தொழுகை நேரம் வந்து விட்டது என்பதைக் கூட நினைவுபடுத்த வேண்டியது ஏற்படுகிறது. அதேபோன்று தெரிந்தவர்களின் வீடுகளில் தங்கியிருப்பவர்கள் நீண்ட நேரம் சபை கூடி நேரத்தை வீணாக்குகின்றனர். ஜல்ஸாவுக்கு வந்த அசல் நோக்கத்தையே மறந்துவிடுகின்றனர். எனவே ஒவ்வொரு பணியிலும் நடுநிலைமையைக் கையாள வேண்டும். இதுவே ஒரு முஃமினின் அடையாளமாகும். அல்லாஹ் முஃமின்களுக்கு விருந்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும். விருந்து முடிந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டதைப் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நேரத்தை வீணாக்கக் கூடாது என்று கட்டளையிட்டதைப் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அரிய நேரத்தை வீணாக்கிவிடக் கூடாது என்று அன்னாரின் நேரத்தின் மதிப்பு, அவர்களின் அந்தஸ்து ஆகியவற்றை கவனத்தில் கொண்டு இறைவன் இந்த கட்டளையிட்டுள்ளான் எனினும், முஃமின்களுக்கும் இதில் ஓர் அறிவுரை உண்டு. நேரத்தின் அருமையை விளக்கும் போதனையாகும்.

**பேச்சில் மூழ்கி விடாமல் கலைந்து சென்று விடுங்கள் (33:54)** நிச்சயமாக ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளுங்கள். தொடர்புகளை உறுதியாக்குங்கள். ஆனால் நேரத்தையும் சற்று கவனத்தில் கொள்ளுங்கள். எவரது வீட்டில் அல்லது எந்த அமைப்பின் கீழ் உட்கார்ந்து உண்கிறீர்களோ அம்மக்களையும் கவனத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக வேலை செய்பவர்கள், அவர்களையும் வெளியில் இருந்து வந்த விருந்தாளிகளால் தமது மஜ்லிஸில் அமர்ந்து பேசுமாறு வற்புறுத்தப்படுகிறது. அவர்கள் உட்காராவிட்டால் அவரது உறவினர்கள் புகார் கூறுகின்றனர். இது தவறு. அதேபோன்று ஐரோப்பாவில் இருந்து வரும் விருந்தாளிகள் அல்லது வெளியிலிருந்து வந்தவர்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்திருப்பதால் அங்கிருக்கிற அனைவரையும் விடுமுறையில் இருப்பவர்களாக கருதுகின்றனர். நீங்கள் விடுமுறையில் இருக்கலாம். ஆனால் எல்லாரும் விடுமுறையில் இருப்பவர்கள் அல்ல.

அதுபோன்று பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடும் இடத்தில் தீய, கேலியான பொழுதுபோக்குகள் உருவாக்கப்படுகின்றன. உடனே பணியில் இருப்பவர்கள் தடுக்கும் போது அதனால், ஒருவர் பேச மற்றவர் பதில் பேச என்று மனக்கசப்புகள் உருவாகின்றன. தவறான வார்த்தைகள் பேசுகின்ற, புகார் கூறுகின்ற மக்கள், இங்குள்ள உள்ளூர் மக்கள் என்றால் பிரச்சனைகள் நீண்டு கொண்டே போய் விடுகிறது.

உண்மையான முஃமினைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

**கோபத்தை அடக்குபவர்கள் (3:135)** வரம்பு மீறுபவர்கள், வரம்பு மீறப்பட்டவர்கள் இருவருக்கும் கூறுவேன். ஜல்ஸாவின் சூழ்நிலையின் தூய்மையை கவனத்தில் கொள்ளுங்கள். விருந்தாளிகளும் கண்டும் காணாமலும் விட்டு கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். தமக்கு அநீதியிழைக்கப்பட்டதாக உணர்ந்தாலும் பொறுமையையும், விவேகத்தையும் மேற்கொள்ளுங்கள்.

தொண்டர்களும் விருந்தாளிகளும் கோபத்தைக் காட்டிய போதிலும் தமது உணர்வுகளை அடக்கிக் கொள்கின்றனர். இவ்வருடம் Car checking, Security பிரச்சனைகள் இருப்பதால் சற்று நேரம் தாமதமாகலாம். எனினும் பொறுமை செய்யுங்கள். இப்போது பெண்கள் பகுதியில் hand bag –களை பரிசோதிப்பதில் மிகவும் நேரம் தாமதமாவதாக அறிகிறேன். இனிவரும் நாட்களில் பெண்கள் அவசியமான பொருள்களை மட்டும் பேக் –ல் எடுத்து வாருங்கள். குழந்தைகளுக்கான பொருட்கள் தேவைப்படுகின்றன. ஏனெனில் சோதிப்பதில் நேரம் மிகவும் வீணாகி விடுகிறது. சிலர் 2–3 பேக் கொண்டு வருகின்றனர். நானும் சிறிது நின்றுதான் வந்தேன். பெண்கள் பகுதியில் நுழைவதற்கு மிகவும் நேரமாகிறது என்று கூறப்பட்டது. அதே வேளையில் ஆண்களின் நுழைவாயிலில் மிகவும் எளிதாக மக்கள் உள்ளே போய்க் கொண்டிருந்தனர். எவ்வாறிருப்பினும் இதனால் அமைதியின்மை உருவாகிறது. அல்லது சிலர் மாற்றுத் திறனுடையவர்களாக இருக்கின்றனர். அவர்களை முழுமையாக பரிசோதிக்கும்போது பின்னால் வருபவர்கள் நிற்க வேண்டியதிருக்கிறது. மாற்றுத் திறனுடையவர்களுக்கு தனி நுழைவாயில் உள்ளது. அங்கும் விரைவாக அவர்கள் கடந்தாலும் மாற்றுத்திறனுடையவர்களை அழைத்து வருபவர்களை பரிசோதிக்க வேண்டியதிருக்கிறது. அதனால் அதற்கு பின்னால் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. அது சூழ்நிலையை மிகவும் கடினமாக்கி விடுகிறது. பொறுமையையும் விவேகத்தையும் காட்டுவது ஒரு முஃமினின் அடையாளமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உறவுகளை முறிப்பவர்களுடன் உறவுகளைப் பேணுவது பெரிய விஷயமாகும். உங்களுக்கு தேவைப்படும் போது ஒருவர் உதவி செய்யவில்லை என்பதற்காக அவருக்கு தேவைப்படும் வேளையில் பயன்படாமல் இருப்பது சரியன்று. உங்களை தவறாக பேசுபவரையும் மன்னியுங்கள்.

இங்கு தவறாகப் பேசுவது என்ற கேள்விக்கே இடமில்லை. இங்கு நாம் ஒரு கடமையை நிறைவேற்றவிருக்கிறோம். அந்த பொறுப்பு தொண்டர்களுக்கு உள்ளது. எனவே தொண்டர்களிடம் ஒரு தவறு ஏற்பட்டு விட்டாலோ, பரிசோதிப்பதில் தாமதம் ஏற்பட்டாலோ, எவரது Card –லாவது ஆட்சேபனைக்குரிய விஷயம் இருந்தால் உடனே அவர்களை ஏசுவதற்குப் பதில் பொறுமை காட்ட வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய இவ்விஷயங்கள் உங்கள் விவேகத்தை துரிதப்படுத்தும் வேலையாகும். நீங்கள் விவேகத்துடன் செயல்படும் போது எல்லா இறுக்கமும் சண்டையும் முறிந்து விடும்.

விருந்தாளிகள், டியூட்டி கொடுப்பவர்கள் இரு தரப்பாரிடமும் நான் கூறிக் கொள்கிறேன். நீங்கள் விவேகத்தைக் காட்டுங்கள். நான் டியூட்டி தருகின்ற சேவகர்களிடம் ஒருமுறை கூறிக் கொள்கிறேன். சில இளைஞர்களைப் பற்றி நான் கேள்விப்படுகிறேன். அவ்வாறு நடக்காது என்று நம்புகிறேன். ஆனால் ஜல்ஸா நாட்களில் சில தவறான நடவடிக்கைகள் நடந்து விடுகின்றன. அதனால் மனக்கசப்புகள் உருவாகின்றன. சிலர் இடம், பொருள் தெரியாமல் கேலி கிண்டல்களில் ஈடுபடுகின்றனர். தெரிந்தவர்களை கேலியாக அதிக நேரம் எடுத்துக் கொண்டு பரிசோதிக்கின்றனர். இந்த கேலிகிண்டல்கள் சிலவேளை மனவருத்தத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனவே நுழைவாயிலில் இதுபோன்ற மனக்கசப்புகளுக்கு உள்ளாகுபவர்கள் இருக்கிறார்கள். எனவே நாயிப்கள் இருக்க வேண்டும். இரண்டாவது இந்த கேலிகிண்டல்களால் நேரங்கள் வீணாகின்றன. பின்னால் வருபவர்களும் காத்திருக்க வேண்டியது வருகிறது. எனது கவனத்திற்கு வந்தது. எனவே இதனை கூறுகிறேன். எவ்வாறிருப்பினும் ஒரு நல்ல நோக்கத்திற்காக இங்கு விருந்தாளிகள் வந்துள்ளனர். அந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க அன்பு, நேசத்தின் முன்மாதிரி ஆகிவிடுங்கள். அல்லாஹ் முஃமின்களின் அடையாளத்தை கூறியுள்ளான்.

**தங்களுக்குள் மிக்க மென்மையாக நடந்து கொள்பவர்கள் (48:30)** என்று கூறுகின்றான். காரணம் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அவ்வாறு செய்கின்றான். இந்த அருளைப் பெறுவதற்காக சின்னச்சின்ன சச்சரவுகளில் ஈடுபடுவதற்குப் பதில் ருகூவு, ஸுஜூது மற்றும் இபாதத் மூலம் தனது வாழ்வில் நோக்கத்தை அடைய முயற்சி செய்கின்றனர்.

இங்கு வந்துள்ள ஒவ்வொரு விருந்தாளியும் அல்லாஹ்வுக்காக இந்த பயணத்தை மேற்கொள்ள முயற்சி செய்யுங்கள். நான் சென்ற குத்பாவில் விருந்தோம்புபவர்களிடம் கூறினேன். வெளியில் இருந்து வருபவர்கள் சேவகர்களின் பணிகளை கவனிக்கின்றனர். உங்கள் பணிகளைப் பார்த்து பெரிதும் கவரப்படுகின்றனர். ஒவ்வொரு தொண்டரும் மவுனமாக தப்லீக் செய்கின்றனர்.

அதேபோன்று இங்கு வருகின்ற ஒவ்வொரு விருந்தாளியும் மவுனமாக ஜமாஅத்தை தப்லீக் செய்பவராவார். எனக்கு இங்கும் ஜெர்மனியின் அறிக்கையும் வந்துள்ளது. அதிலிருந்து தெரிய வருகிறது. முதன்முறையாக இங்கு வருகிற விருந்தாளிகள் வியந்து போய் இதனைத்தான் கூறுகின்றனர். இவ்வளவு பெரிய கூட்டம் எந்த குழப்பமும் கூச்சலும் இன்றி மிகவும் அமைதியாக நடக்கிறது. இதனைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் முஸ்லிம்களிடம் இப்படி ஒரு காட்சியை நாங்கள் முதன்முறையாக பார்க்கிறோம். பார்ப்பது என்ன? ஒருவர் மற்றவரிடம் இதனை கூறவும் கேட்கவும் செய்கின்றனர். இது ஓர் மவுனமான தப்லீக் ஆகும். இதனைத்தான் ஜல்ஸாவின் நாட்களில் அஹ்மதிகள் செய்கின்றனர். எனவே முன்னரை விட அதிகமாக இந்த அமல் மூலம் அல்லாஹ்வின் அன்புப் பார்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகள் மீது படுகின்றது. அவர்கள் அல்லாஹ்வுக்காக பொறுமையை, விவேகத்தை சில சூழ்நிலைகளில் காட்ட வேண்டியதிருக்கிறது. இஸ்லாத்தின் உயரிய நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டியது ஏற்படுகிறது. இதன் காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களின் ஹக்கில் செய்த துஆவுக்கு வாரிசாகின்றீர்கள்.

ஒரு விஷயத்தை விருந்தாளிகளுக்கு ஒவ்வொரு வருடமும் நினைவூட்டுகிறேன். ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு விருந்தாளியாக (பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து) வருபவர்கள் ஒரு வாரம், இரண்டு வாரத்திற்கு மேல் இங்கு தங்க வேண்டாம். இவ்வாறு அதிக நாட்கள் தங்குவதால் ஜமாஅத்திற்கு பெரும் பிரச்சனை ஏற்படுகிறது. ஜமாஅத்தின் நிரந்தர அமைப்பும் பிரச்சனைக்குள்ளாகிறது. ஜமாஅத்தின் எல்லா அமைப்பும் சரிவர இயங்குவதற்கு இதனை பேண வேண்டும். தற்காலிக தங்குமிடங்கள் உள்ளன. அது ஜமாஅத்திற்கு சொந்தமான இடமாகவோ அல்லது யாராவது ஒருவரின் வீடாகவோ இருக்கலாம். அல்லது பள்ளியாக இருக்கலாம். வீடுகள் சிறியதாக இருப்பதால் அதிகமாக பயன்படுத்த முடியாது. ஆனால் பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை விருந்தாளிகள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. பிறகு அரசாங்கம் கண்காணிக்கத் தொடங்குகிறது. இங்கு ஜமாஅத் அமைப்புக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டு. இம்மக்கள் சட்டத்தை மதிப்பவர்கள் என்று கருதுகின்றனர். பிறகு நம்மிடம் சட்டமீறல் ஏற்படும் போது அந்த அபிப்பிராயத்தில் தப்பெண்ணம் ஏற்படுகிறது.

எனவே இதில் கவனம் செலுத்துங்கள். தங்குவதாயின், உங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்குங்கள். அதில் அவர்களுக்கும் உடன்பாடு இருக்க வேண்டும். பலவந்தமாக போயிருக்க முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு வலுக்கட்டாயமாக தங்குவதை தடுத்துள்ளார்கள்; அனுமதிக்கவில்லை. நீண்ட நாள்களுக்கு விருந்தாளிகளை வைத்து உபசரிப்பது விருந்தோம்பல் செய்பவரை கஷ்டத்தில் போட்டு விடும்.

ஒரு நல்ல நோக்கத்திற்காக வந்த ஒரு முஃமினுக்கு இதில் ஒரு கவனம் இருக்க வேண்டும்.

ஒரு முஃமினிடம் உள்ள எதிர்பார்ப்புகளை பலவந்தமாக இருக்கும் அவ்விருந்தாளியிடம் எதிர்பார்க்க முடியாது. பிறகு முஃமின்களிடம் இறைவன் கூறுகிறான். ஸலாம் கூறியவாறு ஒரு வீட்டில் நுழைய வேண்டும்.

மேலும் கூறினான்: **உங்கள் வீடுகளல்லாத மற்ற வீடுகளில் அனுமதி பெற்று, அவற்றிலுள்ளவர்க்கு ஸலாம் கூறாதவரை நுழையாதீர்கள். [24:28]**

மக்கள் அனுமதி பெற்று விருந்தாளியாக வரும் போது வீட்டினருக்கோ, அமைப்பில் வேலை செய்பவர்களுக்கோ கஷ்டம் தரும் அளவுக்கு நீண்ட காலம் தங்கி விடுவார்களோ என்ற கவலையை அவர்களிடமிருந்து அகற்றவே விருந்தாளிகளுக்கு போதனை செய்துள்ளான். வீட்டினருக்கு சாந்தியின் தூதுச்

செய்தியை வழங்குங்கள். நான் உங்களுக்கு கஷ்டம் தருபவனல்லன். விருந்தோம்பல் செய்பவருக்கு கஷ்டம் தருகிற விருந்தாளியாக நானில்லை என்ற தூதுச் செய்தியை வழங்குகிறார். நான் ஒரு உயரிய நோக்கத்திற்காக வந்துள்ளேன். அது நிறைவேறிய பிறகு நான் தொலைதூரத்தில் வந்ததால் சிறிது தங்க வேண்டியது ஏற்படுகிறது. அந்த கட்டாயச் சூழ்நிலைக்காக சிறிது நாள் தங்கி விட்டு திரும்பிப் போய் விடுவேன். என்னை கவனிப்பதிலும் உங்களுக்கு எந்த சிரமமும் தேவையில்லை. ஏனெனில் என்னை சரியாக கவனிக்கவில்லை என்ற எந்த புகாரும் என் தரப்பிலிருந்து வராது. விருந்தாளியின் உரிமையை எனக்கு தரவில்லை என்று கூற மாட்டேன் என்ற தூதுச் செய்தியை விருந்தளிப்பவருக்கு வழங்குகிறார். முஃமின் ஸலாம் கூறுவதன் மூலம் அன்பு, நேசத்தை வளர்ப்பவராகிறார். ஒரு முஃமினுடைய பயணம் மார்க்க நோக்கத்திற்காக இருக்கும் போது எம்மை விருந்தோம்பல் செய்பவர்களுக்கு என்னால் எவ்வாறு துக்கம் தர இயலும்?

இன்னோரிடத்தில் இறைவன் வீட்டினருக்கு ஸலாம் சொல்லும் தூதுச் செய்தியைப் பற்றி கூறுகிறான்:

**இது அல்லாஹ்விடமிருந்துள்ள ஒரு பெரும் அருளுக்குரியதும் தூய்மையானதுமாகிய வாழ்த்தாகும். [24:62]**

இது அசல் பரக்கத்திற்குரிய துஆவாகும். எனவே விருந்தாளிகளும் விருந்தோம்பல் செய்பவர்களும் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறியவாறு இருப்பவர்களாவர். மேலும் ஒருவர் மற்றவர் மீது எந்த வகை கவலையும், பயமுமின்றி சுதந்திரமாக இருப்பவர்கள் ஆவர். ஒருவருக்கொருவர் துஆவின் மூலம் அருளை வழங்குகின்றனர்.

இது மிகவும் தூய்மையன துஆவாகும். அதே வேளையில் இது, வருபவர்கள், இருப்பவர்கள் ஆகிய இரு பிரிவினரின் பரக்கத்திற்கும் காரணமாக துஆவாகும். எனவே இது ஒரு அழகிய சூழ்நிலையாகும். இதனை இறைவன் நம்மிடம் உருவாக்க விரும்புகிறான். ஆனால் நாம் நமது தந்திரம், சுயநல நோக்கத்தால் இதனை வீணாக்கினால் அது பெரும் பேரிழப்பாகும். அல்லாஹ்வின் பரக்கத்திலிருந்து விலக்கப்படுவதை ஒரு முஃமினால் இதனை சகிக்க முடியாது. நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அருகில் வாழ்ந்தவர்களுடன் அன்னார் எந்த அளவுக்கு யதார்த்தமான தொடர்பு வைத்திருந்தார்கள் எனில் அவர்களை நல்லொழுக்கத்தின் உயர்நிலைக்கு அவர்களை எடுத்துச் சென்றனர். பொய்யான கவுரவம், பொய்யான அகம்பாவம் போன்றவற்றின் சுவர்களை வீழ்த்தி, தர்பிய்யத்திற்கான புதுவழிகளை திறந்தார்கள். இந்த உயர் நல்லொழுக்கத்தை அன்னார் தமது உயரிய நல்லொழுக்கத்தின் காரணத்தால் சஹாபாக்களிடம் உருவாக்கினர். நமக்கும் அம்மக்களை முன்னுதாரணமாக்கினார்கள்.

ஒரு ஹதீஸில் அன்னாரின் தூய இயல்புக்கான ஆதாரம் இவ்வாறு கிடைக்கிறது. ஹஸ்ரத் அபூமஸ்வூத் (ரலி) அவர்களுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

ஒரு மனிதர் அபூ ஷைப் என்று அழைக்கப்பட்டார். அவர் தனது அடிமையிடம் கூறினார். ஐந்து பேருக்கான உணவு சமைக்க வேண்டும். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தில் பசியின் அடையாளத்தைக் கண்டேன் என்று கூறினார். அடிமை உணவை தயார் செய்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்முடன் இருந்தவர்களை கூப்பிட்டு அனுப்பினார்கள். அவர்கள் வந்ததும் அவர்களுடன் இன்னொருவரும் பின்தொடர்ந்தார். அம்மனிதர் விருந்திற்கு அழைக்கும் சமயத்தில் அங்கு இல்லை; (திடீரென்று வந்திருந்தார்). ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாசலை வந்தடைந்ததும் விருந்திற்கு அழைத்தவரிடம் எங்களுடன் இன்னொருவர் வந்துள்ளார். நீங்கள் கூப்பிடும்போது அவர் இல்லை. அவருக்கு உணவளிக்க உங்களுக்கு சம்மதமா? அல்லது அவரை போகச் சொல்லிவிடவா? என்று கேட்டார். அவரும் வரட்டும் என்று விருந்தளிப்பவர் கூறியதும், அவரையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்கள். இது சஹாபாக்களிடம் அன்னார் உருவாக்க விரும்பிய நல்லொழுக்கமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றலிலிருந்து ஒவ்வொருவரும் பயன்பெற்றனர். நல்லொழுக்கங்கள் அவர்களிடம் உருவாகின. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தால் இடையில் வந்து சேர்ந்து கொண்ட நபரிடம் எங்களுக்கு ஒரு விருந்துக்கு சொல்லப்பட்டுள்ளது. அழைக்கும் போது நீங்கள்

இல்லை. எனவே நீங்கள் எங்களுடன் வரவேண்டாம் என்று கூறியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மகத்தான ஆசிரியராக இருந்தார்கள். செயல் மூலமாக சஹாபாக்களுக்கு சில விஷயங்களை புரிய வைக்க விரும்பினார்கள். எனவே அன்னார் அவரை தன்னுடன் வர அனுமதித்தார்கள். ஒரு மனிதர் என் மீது மிகப்பெரும் அன்பு வைத்துள்ளார். எனவே முகத்திலிருந்து வெளிப்படும் சிறு அறிகுறிகளையும் கவனிக்கிறார். அத்தகைய மனிதர் நான் கேட்கும் போது எப்படி மறுப்பார்? என்று இடையில் வந்தவருக்கு ஆறுதல் கூற விரும்பினார்கள். அதே வேளையில் இந்த சூழ்நிலையிலும் வீட்டுக்காரர் மறுத்தால் எந்த தவறான வார்த்தையும் கூறாமல் திரும்பிப் போய்விட வேண்டும் என்ற பாடத்தையும் கற்றுத் தந்தார்கள். ஏனெனில் உமது உரிமை ஒன்றுமில்லை. சம்மதிப்பது வீட்டுக்காரரின் கருணையாகும். எனவே எந்த பொய்யான அகம்பாவமும் காட்டக் கூடாது. சஹாபாக்களும் ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்களுடைய பரிசுத்தமாக்கும் தன்மையின் கீழ் வந்தார்கள்.

ஒரு ஹதீஸில் வருகிறது. அன்னார் சஹாபாக்களுக்கு வீட்டுக்காரர் சம்மதிக்காவிட்டால் எந்த அவச்சொல்லும் சொல்லாமல் திரும்பிவிட வேண்டும் என்று பயிற்சி அளித்தார்கள். அதே வேளையில் சஹாபாக்கள் விருந்தோம்பலின் ஹக்கை நிறைவேற்றாமல் போவது எப்படி சாத்தியம்? ஒரு சஹாபியால் வீட்டுக்கு வந்த விருந்தாளியை எப்படி திருப்பி அனுப்ப இயலும்? இதன் காரணத்தால் சஹாபியின் விருந்தோம்பும் ஆவல் அவர் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. எவ்வாறிருப்பினும் விருந்தோம்பும் அந்த சஹாபியின் துடிப்பு இங்கு வெளிப்படுகிறது. இந்த பரந்த மனப்பான்மை நம்மில் ஒவ்வொருவருக்கும் உருவாக வேண்டும். நமது வாழ்வில் இதனை செயல்படுத்திக் காட்ட வேண்டும்.

ஜல்ஸாவுக்காக வந்திருக்கக்கூடிய தெரிந்தவர்களை சந்திப்பதும் சலாம் சொல்வதுமான காட்சி இங்கு அதிகமாக தென்படுகிறது. இதுவே அசல் இஸ்லாமிய சமூகமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இதைத்தான் கூறியுள்ளார்கள். நீங்கள் அறிந்தவர் அறியாதவர் எல்லாருக்கும் ஸலாம் கூறுங்கள். அல்லாஹ்வின் அருளால் பலர் இதன்படி அமல் செய்கின்றனர். வெளியிலிருந்து வந்த புதிய அஹ்மதிகள் இதனால் கவரப்படுகின்றனர். எனவேதான் நீங்கள் அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் சலாம் கூறுங்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த நாள்களில் அதிகமாக ஸலாம் கூறுங்கள். அதன் மூலம் இந்த வழக்கம் நிரந்தரமாக உங்களிடம் ஏற்படும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸலாமை பரப்புவது இஸ்லாத்தின் மிகச்சிறந்த ஒருவகையாகும். நிபந்தனை என்னவெனில், சலாமின் ரூஹை (தத்துவத்தை) புரிய வேண்டும். ஸலாம் சொல்தல் என்பது அமைதியின் தூது, அன்பின் வெளிப்பாடு. அதன் மூலம் அன்பும் சகோதரத்துவமும் நிலைநாட்டப்படும். ஒருவர் எவ்வளவு கோபமடைந்து இருந்தாலும் தாம் கோபப்படுகிற அம்மனிதரை மன்னித்து உளப்பூர்வமாக சலாம் சொல்லி தழுவி விடுங்கள். இவ்வாறு முஃமின் ஒன்றாகி அல்லாஹ்வுக்காக பயணம் மேற்கொண்டதின் பரக்கத்தை பெறுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு விருந்தாளியாக எவ்வாறு இருந்தார்கள் என்பதும்கூட நமக்கு ஒரு பாடத்தை கற்றுத் தருகிறது. அதனை ஒரு முஃமின் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு விருந்தாளி என்ற முறையில் எங்கு சென்றாலும் அதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நபிமார்களின் ஒவ்வொரு பயணமும் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றன. அவர்களது ஒவ்வொரு வினாடியும் இறைவனது கட்டளைகளை பேணுவதில் கழிகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை எடுத்து வைக்கிறேன். அன்னார் ஒரு விருந்தாளியாக காட்டிய நல்லொழுக்கத்தை தெரிந்து கொள்ள முடிகிறது.

சேக் யாகூப் அலி சாஹிப் இர்பானி அறிவிப்பு செய்துள்ளார். ஜங்கே முகத்தஸ் விவாதத்தின் போது நடந்த நிகழ்ச்சி – இது முஸ்லிம்களுக்கும் கிறித்தவர்களுக்கும் இடையில் இந்த விவாதம் 1893 –ல் அம்ரிஸ்டரில் நடந்தது. கிட்டத்தட்ட 15 நாள்கள் நடந்தது. இதில் இஸ்லாத்தின் பிரதிநிதியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருந்தார்கள். மிகவும் தெளிவான அடையாளங்களுடன் இஸ்லாத்தின் பெருமையை எடுத்து வைத்தார்கள். ஒரு நூல் வடிவில் அந்த விவாதம் ரூஹானி கஸாயினில் உள்ளது. இந்த விவாதத்திற்காக

அன்னார் அம்ரிஸ்டரில் தங்கியிருந்த போது ஒருநாள் ஏற்பாட்டாளர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உணவு தரமறந்து விட்டனர். இரவின் பெரும் பகுதி கழிந்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் எதிர்பார்த்த பிறகு உணவு பற்றி கேட்ட போது ஏற்பாடு செய்தவர்கள் மறந்து விட்டது தெரிய வந்தது. உணவும் காலியாகி விட்டது. கடைகளும் அடைக்கப்பட்டு விட்டன. வெளியில் உணவு வாங்கி வரவும் இயலாது. இந்நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இது தெரிவிக்கப்பட்டது. அப்போது அன்னார் இவ்வளவு பதற்றப்பட வேண்டியதில்லை. உணவு அறையில் பாருங்கள். மீதமான உணவுகள் இருக்கும் அது போதும். உணவு அறையில் பார்த்த போது சில ரொட்டி துண்டுகள் கிடந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இது போதுமானது என்று கூறி விட்டு அதையே உண்டார்கள். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் முன்மாதிரியாகும். நாம் நம்மை அன்னாரின் ஜமாஅத்தில் நம்மை அன்னாரின் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் என்று வாதிக்கிறோம். எனவே இந்த பொறுமையையும் விவேகத்தையும் காட்ட வேண்டும்.

இந்த மூன்று நாட்களில் எவருக்காவது விருந்தோம்பல் செய்வதில் குறைவு ஏற்பட்டால் அதனை பொறுத்து கொள்ளுங்கள். அமைப்பிடம் இதனை கண்டிப்பாக தெரியப்படுத்துங்கள். ஆனால் அன்புடன் செய்யுங்கள்.

ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். விருந்தாளிகள் எந்த அலட்டலும் இன்றி சகஜமாக இருப்பது அவசியம். நீங்கள் குறைகளை அமைப்பிடம் தெரியப்படுத்தா விட்டால் சரிசெய்ய முடியாது. அல்லாஹ் ஜல்ஸாவின் அருள்களிலிருந்து பயனடையச் செய்வானாக! இறுதியில் நான் செக்யூரிட்டி சம்பந்தமாக மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். அது அந்த துறையின் சேவகர்களின் பொறுப்பு மட்டுமல்ல. மாறாக கலந்து கொள்ளும் ஒவ்வொருவரின் பணியும் ஆகும். இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் விருந்தாளிகளைப் பாதுகாப்பதற்காக தமது சுற்றுப்புறத்தை கவனியுங்கள். சந்தேகப்படும் படி எது நடந்தாலும் உடனே அறிவித்து விடவும்.

அதுபோன்று ஜல்ஸாவின் சுற்றுப்புறத்தின் தூய்மைக்காக மற்றும் மற்ற விஷயங்களுக்கான வழிகாட்டல்கள் விவரமாக நிகழ்ச்சிகளுடன் சேர்த்து தரப்பட்டுள்ளன. அதனை நன்றாக படித்து அதன்படி அமல் செய்யுங்கள். துஆவில் நேரத்தை செலவிடுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான தவ்ஃபீக் வழங்குவானாக – ஆமீன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT HADEEKATUL MAHDI JALSA GROUND, LONDON ON 30.07.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**